தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

<u>ஆணை நாள்</u> 10.11.2020

**<u>முன்னிலை</u>**

## முனைவர் ரா.பிரதாப்குமார்

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 3475/B/18</u>**

திரு மு.பிருத்விராஜன் — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொது தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
கயத்தாறு வட்டாட்சியர் அலுவலகம்,
தூத்துக்குடி மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

**<u>ஆணை</u>**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (10.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு மு. பிருத்விராஜன் மற்றும் பொது தகவல் அலுவலர், திரு பால சுப்பிரமணியன், மண்டல துணை வட்டாட்சியர், கயத்தாறு வட்டாட்சியர் அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 06.03.2018 தேதியிட்ட மனுவில், பட்டா மாறுதல் தொடர்பாக 27.01.2018 அன்று கொடுக்கப்பட்ட தனது மனுவின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதன் விவரங்கள் தொடர்பாக கயத்தாறு வட்டாட்சியர் அலுவலக பொது தகவல் அலுவலர் அவர்களுக்கு மனு செய்துள்ளார்.

3. தகவல்கள் வழங்கப்படாததால் மனுதாரர், 11.04.2018 தேதியிட்ட மனுவில் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். முழுமையான தகவல்களை பெற்றுத் தருமாறு தெரிவித்து, மனுதாரர் 11.05.2018 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டின் அடிப்படையில் தொலைபேசியின் வாயிலாக இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் தொலைபேசியின் வாயிலாக மனுதாரர் தான் கோரிய தகவல்கள் பொது தகவல் அலுவலரால் தனக்கு கிடைக்கப்பெற்றது என்றும், ஆகையால் மேற்கொண்டு விசாரணை தேவையில்லை என்றும் தெரிவித்ததன் அடிப்படையில் தகவல்கள்

வழங்கப்பட்டுள்ளதாக கருதி, இவ்வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 3475/B/18</u>**
**<u>பெறுநர்</u>**
பொது தகவல் அலுவலர்,
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
கயத்தாறு வட்டாட்சியர் அலுவலகம்,
தூத்துக்குடி மாவட்டம்.

திரு மு.பிருத்விராஜன்,
த/பெ முத்துசாமி,
681/மு.பிருத்விராஜன்,
த/பெ முத்துசாமி,
681/A/10/2, காந்தி நகர்,
மலையடிப்பட்டி,
இராஜபாளையம் 627 117.

Copy to: File
SCPA-12.11.20